# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2153/29 - 2019 දෙසැම්බර් මස 14 වැනි සෙනසුරාදා - 2019.12.14

*2153/29 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்*

*2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 2147/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகளில் 4 ஆம் பிரிவின் (ஆ) உப பிரிவின் பின்னர் பின்வரும் உப பிரிவை உள்ளடக்கி இத்தால் திருத்தம் செய்கின்றேன்.*

"(இ) எவ்வாறாயினும், மேலே (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கடிதத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்திலும் மற்றும் இறக்குமதியாளரால் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் பட்சத்திலும் குறித்த திருத்தங்களை திறைசேரி செயலாளர் பரிசீலனை செய்ய முடியும்."

(i) மேலே நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனம் பிரத்தியேக பாவனைக்காக மாத்திரம் இறக்குமதி செய்யப்பட வேண்டிய அதே சமயம் வர்த்தக நோக்கிற்காக இறக்குமதி செய்யப்படாதிருத்தல் ;

(ii) மேலே நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனம் குறித்த நாணயக் கடிதத்தைத் திருத்துவதற்கு திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட நபரின் பெயரில் மாத்திரம் பதிவுசெய்யப்படல் ;

(iii) மோட்டார் வாகனத்தின் முதல் பதிவுத் திகதியில் இருந்து ஒரு வருடம் செல்லும் வரை மற்றொரு நபருக்கு அவ் மோட்டார் வாகனத்தை மாற்றல் செய்ய முடியாமை ;

(iv) மேலே (i), (ii) மற்றும் (iii) நிபந்தனைகள் மற்றும் நாணயக் கடிதத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய சத்தியக் கடதாசி ஒன்றை திறைசேரி செயலாளருக்குச் சமர்ப்பிப்பதன் ஊடாக மாத்திரம் குறித்த நாணயக் கடிதத்திற்கான திருத்தத்தை ஏற்புடையதாக்கும் பொருட்டு திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்காக வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தல்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2019, திசெம்பர் 14.

1-08

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.